THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Wednesday, the 26th February 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Buildings owned by the Government

* 47 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state the buildings owned by Tamil Nadu Government in the Fort St. George, Madras?

தமிழ்நாடு அரசின் கட்டிடங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் தமிழக அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முனிவர் ஜார்ஜ் கோட்டைப் பகுதியின் உள்ளே அமைந்துள்ள கீழே குறிப்பிட்ட கட்டிடங்கள் தமிழக அரசுக்குச் சொந்தமானவை :—

(1) சட்ட மன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உட்பட தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த துறைகள் அனைத்தும் உள்ள தலைமைச் செயலக முதன்மைக் கட்டிடம்;

(2) தேசிய மாணவர் படைக் கட்டிடங்கள்;

(3) நாவாப் பணியாளர் குடியிருப்பு வரிசை;

(4) காரிசன் அரங்குக்கு அருகிலுள்ள கட்டிடங்கள் (படை வீரர் ஓய்வூதியம் கொடுக்கும் அதிகாரியின் அலுவலகக் கட்டிடங்கள்);

(5) காரிசன் அரங்கம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடங்களை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு அதற்குப் பதிலாகக் கோடிக்கணக்கான ரூபாய் தருவதென்று கூறுவதாகக் கேள்விப் படுகிறேன். அப்படியிருந்தால் புதிதாக செகரட்டேரியட் கட்டும் போது பெங்களூரில் கட்டியுள்ள 'விதான் சுதா' போன்று எல்லா வசதிகளும் நிறைந்து, எல்லா ஆபீசர்களும் செகரெட்டேரியட்டிற் குள்ளேயே இருக்கும்படி அமைக்க அரசாங்கம் முன்வருமா?

[26th February 1969

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசு இந்தக் கட்டிடங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவித்ததாக தகவல் எதுவும் இந்த அரசுக்கு இல்லை. மைசூரில் உள்ளதைப் போல விதான் சுதா போன்றவற்றை கட்டுவதைவிட, அந்தப் பணத்தைக்கொண்டு வீடற்ற ஏழைகள் பலருக்கு சிறுசிறு வீடுகள் கட்டிக்கொடுப்பது தேவை என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: இந்த நகரத்திலுள்ள பல்வேறு பெரிய கட்டிடங்களை விற்ருல், வீடில்லாத ஏழைகள் அத்தனை பேருக்கும் வீடு கட்டிக்கொடுக்கலாம். அதையும் இந்த அரசு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கட்டிடங்களை இடித்தால் அல்லது விற்ருல் கட்டிக் கொடுக்கலாம் என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. கட்டிடங்களை அப்படியே விற்றுக் கட்டிடம் கட்டிக் கொடுக்கலாம் என்ருல் அதற்கு மனைகள் வேண்டும். அவற்றை வாங்க வேண்டும். அதற்குரிய மனைகள் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மைசூரில் விதான் சுதா கட்டிடம் கட்டிய காரணத்தால் அங்குள்ள முதலமைச்சர் திரு. ஹனுமந்தையா அவர்கள் பதவியிலிருந்து போக நேரிட்டது. இந்த அரசுக்கு அது தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதையும் மனதில் வைத்துத் தான் பதில் சொல்லப்பட்டது.

திரு. சி. வி. ராஜகோபால்: சென்னையில் இருக்கிற சிறிய பெரிய கட்டிடங்களை விற்க வாங்க வேண்டுமென்ற கொள்கையிருக்குமானுல் அதை வாங்குகிறவர்கள் யாராவது இருப்பார்களா, அல்லது ஆட்சி தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: விற்பதற்கு யோசனை இருந்தாலல்லவா வாங்குகிறவர்களைப் பற்றிக் கவலைப்படவேண்டும்.

"Vazhia Senthamizh" Song

* 48 Q.—THIRU T. K. SHANMUGAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to provide ways and means for singing the song,

> "Vazhia Senthamizh
> Vazhga Natramizhar
> Vazhia Bharatha Mani Thirunadu"

composed by Mahakavi Bharathiyar, at the end of all the functions held on behalf of the Tamil Nadu Government?